# வான்முகில் – அரசமைப்பு உரிமைக் கல்வி

# அரசமைப்பு தினம்-நவம்பர் 26

# Constitution Day

## முகப்புரையை உரக்க வாசிப்போம்..

### பள்ளிக் குழந்தைகள் ஓவியம் வரைதல்

### ஆசிரியர்கள் கட்டுரை எழுதுதல், வினாடி-வினா

வான்முகில் அமைப்பின் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தின் சார்பில் வருகிற **"நவம்பர் 26 - அரசமைப்பு சட்ட தினம்"** தமிழகத்தில் சிறப்பாக அனுசரிக்க பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. **நவம்பர் 25** வெள்ளிக்கிழமை தமிழகத்தின் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் நடைபெறும் **பள்ளி மேலாண்மைக் குழுவின் மாதாந்திரக் கூட்டத்தில் முகப்புரை வாசிப்பு நிகழ்வு** நடைபெறும். இந்நிகழ்வில் ஏறத்தாழ 8 இலட்சம் பெற்றோரும், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர். தமிழகத்தில் செயல்பட்டு வரும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இல்லம் தேடிக் கல்வி மையங்களில் முகப்புரை வாசிக்கும் நிகழ்வும் நடைபெற உள்ளது. இதன் மூலம் **தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஏறத்தாழ 50 இலட்சம் பேர் முகப்புரையை உரக்க வாசிப்பார்கள்.** மேலும் குடிமைச் சமூக அமைப்பினரும் இந்த "முகப்புரையை உரக்க வாசிப்போம்" நிகழ்வில் தமிழகம் மற்றும் புதுவையில் பரவலாக பங்கேற்பர்.

இதை ஒட்டி குழந்தைகள், ஆசிரியர்கள், அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற நெறியாளர்கள், குழந்தைகள் மற்றும் குடிமைச் சமூகச் செயற்பாட்டாளர்கள் பங்கேற்பதற்கான வெவ்வேறு நிகழ்வுகளை வான்முகில் அமைப்பு நவம்பர் 25 – 26 இல் ஏற்பாடு செய்து வருகிறது. இவற்றில் தங்களுக்கு பொருத்தமான நிகழ்வில் நீங்களும் பங்கேற்கலாம்.

### நிகழ்வு 1 - பள்ளிக் கூடுகையில் முகப்புரையை உரக்க வாசித்தல்:

தமிழகம் மற்றும் புதுவையில் செயல்படும் அனைத்துப் பள்ளிகளிலும் அரசமைப்பு முகப்புரையை பரவலாக எடுத்துச் செல்ல வேண்டுகிறோம். தங்கள் பள்ளியில் **நவம்பர் 25 அன்று காலை 9 மணியளவில் பள்ளிக் கூடுகையில் "அரசமைப்பு தினத்தை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடும் விதமாக முகப்புரையை அனைத்து மாணாக்கர்களும் ஆசிரியர்களும் கூட்டாக இணைந்து உரக்க வாசிக்க"** அன்போடு அழைக்கிறோம்.

**கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள்:**

1. முகப்புரையை உரக்க வாசிப்பதற்கான "வாசிப்புப் பயிற்சியை" தேர்வு செய்யப்பட்ட 7 மாணவர்கள் கொண்ட குழுவினர் முன்கூட்டியே எடுக்க வேண்டும்.
2. இதற்காக மாணவர்கள் தேர்வு செய்யப்படுவதில் எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் இருப்பதை உறுதி செய்தல் அவசியம்.
3. இதனை வழி நடத்தும் பொறுப்பினை ஓர் ஆசிரியர் மேற்கொள்ளுவது நன்று.
4. நிகழ்வன்று பள்ளியில் பயிலும் அனைத்து மாணாக்கர்களும் கூடுகையில் பங்கேற்பதை உறுதி செய்யவேண்டும்.
5. அரசமைப்புச் சட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும் முகப்புரையில் இடம்பெறும் மதிப்பீடுகள் குறித்தும் ஓர் ஆசிரியர் 5 நிமிட விளக்கவுரை வழங்குவது மிகச்சிறப்பாக அமையும்.
6. இந்நிகழ்வினை ஒளிப்படம், காணொளி பதிவாக எடுத்து பள்ளி ஆவணத்திற்காக வைத்துக் கொள்வது சிறப்பு. எங்களது மின்னஞ்சலுக்கும் creconstitutionday2022@gmail.com அனுப்பி வைத்திட வேண்டுகிறோம்.

## நிகழ்வு 2 - பள்ளி மாணாக்கர்கள் ஓவியம் வரைதல்:

**"அரசமைப்பு உரிமைகளே எமது உயிர்மூச்சு"** என்ற தலைப்பில் தங்கள் பள்ளியில் அரசமைப்பு உரிமைக் கல்வி பயிலும் மாணாக்கர்கள் ஓவியம் வரைவதை ஊக்குவிக்கலாம். விருப்பமுள்ள மாணாக்கர்கள் ஓவியம் வரைதலுக்காக நவம்பர் 25 அன்று ஏதேனும் ஒரு வகுப்பு நேரத்தை ஒதுக்குதல் அவசியம்.

**விதிமுறைகள்:**

1. தங்கள் பள்ளியில் 6, 7, 8 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் அனைவரும் பங்கேற்கலாம்.
2. ஓவியம் வரைவது ஒரு போட்டியல்ல. மாணவர்களின் திறனை வெளிப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும், பங்கேற்க வைக்கவும் வழங்கப்படும் வாய்ப்பு.
3. இது குறித்து குழந்தைகளுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்தல் அவசியம் (இந்த அறிவிப்பினை நவம்பர் 22 அன்று மாணவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்).
4. பங்கேற்க விரும்புகிற எந்தவொரு மாணவரையும் ஒதுக்கிவிட வேண்டாம்.
5. கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு அரசமைப்பு உரிமைக் கல்வி ஆசிரியர் தலைப்பினை விளக்கிட வேண்டும். மாணவர்களின் கற்பனை திறனுக்கு ஏற்ப ஓவியத்தை அவர்கள் வரையலாம்.
6. ஓவியம் வரைய விரும்பும் மாணவர்கள் நவம்பர் 24 அன்று மாலைக்குள் தங்கள் பெயர்களை பதிவு செய்துவிட வேண்டும்.

7. பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை எமது புலன எண்ணுக்கு (வாட்ஸ் அப்) 9994368523 நவம்பர் 24 அன்று மாலை 5 மணிக்குள் அனுப்பிட வேண்டுகிறோம். அதில் தங்கள் **"பள்ளியின் பெயர், மாவட்டம், பள்ளி முகவரி, வகுப்பு வாரியாக பங்கேற்கவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, ஒருங்கிணைக்கும் ஒரு ஆசிரியரின் தொடர்பு எண்"** ஆகிய தகவல்களை அனுப்பவும்.
8. ஓவியம் வரையும் நாளில் பெயர் கொடுக்காத மாணவர்கள் ஆர்வமிகுதியால் பின்னர் பெயர் கொடுக்க விரும்பினால் அவர்களும் பங்கேற்க எவ்வித தடையும் இல்லை.
9. ஓவியத்தில் பங்கேற்ற மாணவர்களின் இறுதிப் பட்டியலை ஓவியம் நடைபெறும் நாளில் அனுப்பிட வேண்டும்.
10. **நாள் – நேரம்:** நவம்பர் 25 அன்று ஏதேனும் ஒரு வகுப்பு நேரத்தை இதற்காக ஒதுக்கலாம்.
11. **இடம்:** பள்ளி வளாகத்திலேயே ஓவியம் வரைதல் நிகழ்வில் பங்கேற்கும் மாணாக்கர்கள் அனைவரும் வகுப்பு வாரியாக ஒன்றாக அமர்ந்து ஓவியம் வரையலாம்.
12. கலந்து கொள்ளும் மாணவர்களே ஓவியம் வரைவதற்கான பொருட்களை கொண்டு வரவேண்டும்.
13. **ஓவியம் வரைதல் முறை:** பள்ளி மாணவர்கள் தாங்கள் வரைய விரும்பும் ஓவியத்தை ஒரு சார்ட்டில் (Chart) வரைய வேண்டும். அந்த சார்ட் எந்த நிறமாகவும் இருக்கலாம்.
14. ஓவியம் வரையும் சார்ட்டில் மேல்புற வலது ஓரத்தில் **"மாணவரின் பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, மாவட்டத்தின் பெயர்"** போன்றவை கட்டாயம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
15. **ஓவியம் வரைபொருள்:** தாங்கள் வரைய விரும்பும் ஓவியத்தை எவ்வகை வண்ண நிற எழுதுபொருள் மூலமும் வரையலாம் (குறிப்பாக, குழந்தைகள் விரும்புகின்ற கிரயான்ஸ், ஸ்கெட்ச், கலர் பென்சில், வாட்டர் கலர் போன்றவை).
16. மாணவர்கள் ஓவியம் வரையும் போது ஒளிப்படம், காணொளி மூலம் பதிவு செய்து ஆவணப்படுத்தலாம்.
17. வரையப்பட்ட ஓவியங்கள் ஒவ்வொன்றையும் ஆசிரியர் தனது செல்பேசியில் (மொபைலில்) ஸ்கேன் செய்து (Adobe Scan App மூலமாக) அதனை மின்னஞ்சல் முகவரிக்கு ஓவியம் வரைந்த நாளிலேயே அனுப்பிட வேண்டும். அனுப்பிய தகவலை புலன எண்ணுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.
18. மாணவர்கள் வரைந்த அனைத்து ஓவியங்களையும் பள்ளியில் பராமரிக்க வேண்டுகிறோம்.
19. **எமது மின்னஞ்சலுக்கு பகிர வேண்டியவை:** ஓவியம் வரைந்த மாணவர்களின் பட்டியல், ஓவியம் வரையும் போது எடுக்கப்பட்ட ஒளிப்படம், காணொளி, ஸ்கேன் செய்யப்பட்ட அனைத்து ஓவியங்கள், மற்றும் தொடர்புள்ள இதர ஆவணங்களை

இணைத்து ஒரே மின்னஞ்சலாக creconstitutionday2022@gmail.com தலைமை ஆசிரியரின் கடிதத்துடன் **நவம்பர் 28 மாலைக்குள் அனுப்பிட** வேண்டுகிறோம்.

20. **பங்கேற்புச் சான்றிதழ்:** பங்கு பெறும் குழந்தைகள் அனைவருக்கும் வான்முகில் அரசமைப்பு உரிமைக்கல்வி சார்பில் பங்கேற்புச் சான்றிதழ் டிசம்பர் 22க்குள் கிடைக்குமாறு வழங்கப்படும்.

## நிகழ்வு 3 - பள்ளி ஆசிரியர்களுக்கான கட்டுரை எழுதுதல்:

அரசமைப்பு தினத்தை அனுசரிக்கும் விதமாக **"அரசமைப்பு உரிமைகளை வாழ்நெறியாக்குவோம்"** என்ற பொருளில் கட்டுரை எழுதும்படி தங்கள் பள்ளியில் உள்ள ஆசிரியர்களை ஊக்குவிக்கலாம்.

**விதிமுறைகள்:**

1. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அரசுப்பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இதில் பங்கேற்கலாம்.
2. எழுதப்படும் கட்டுரை **"அரசமைப்பு உரிமைகளை வாழ்நெறியாக்குவோம்"** என்ற பொருளில் **500 வார்த்தைகளுக்கு மிகாமல்** இருக்க வேண்டும்.
3. கட்டுரையாளரால் கைப்பட எழுதப்பட்டதாக கட்டுரை இருக்க வேண்டும்.
4. கட்டுரை தமிழ் மொழியில் இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் எழுதப்படும் கட்டுரையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.
5. கட்டுரை வந்து சேர வேண்டிய **கடைசி நாள் நவம்பர் 30, 2022**. தங்கள் பள்ளியில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கட்டுரை எழுதியிருப்பின் அதனை ஒரே தபால் மூலம் வான்முகில் அலுவலக முகவரிக்கு (வான்முகில், 15 கவிதா நகர், மகாராஜா நகர் அஞ்சல், திருநெல்வேலி – 627 011) அனுப்பிடலாம்.
6. **கட்டுரை மதிப்பீடு செய்யப்படும் முறை (25 மதிப்பெண்):** "பொருள் / கருத்து (10) – மேற்கோள்கள், துணைத் தலைப்புகள் (5) – மொழி நடை (5) – பார்வை (5)" போன்றவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.
7. மதிப்பீடு செய்வதற்கு ஒரு **"மதிப்பீட்டுக் குழு"** அமைக்கப்படும். ஒருங்கிணைக்கும் அமைப்பின் முடிவே இறுதியானது.
8. **முடிவுகள் டிசம்பர் 10ஆம் நாள்** அறிவிக்கப்படும்.
9. பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
10. **சிறப்பான 10 கட்டுரைகளுக்கு முகப்புரைப் பெட்டகமும், கேடயமும் விருதாக** வழங்கப்படும்.

## நிகழ்வு 4 – ஆசிரியர்களுக்கான வினாடி-வினா:

**விதிமுறைகள்:**

1. **வினாடி-வினாக்கான பொருள்:** அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், பொதுவான மனித உரிமை நிகழ்வுகள் மற்றும் வான்முகில் அமைப்பு வெளியிட்டுள்ள இந்திய குடிமக்களாகிய நாம் பாடநூல் ஆகியவற்றை மையப்படுத்தி வினாடி-வினா அமையும்.
2. **எங்கு? எப்போது?:** சூம் இணைய வழியில் **நவம்பர் 26 அன்று காலை 11** மணியளவில் நடைபெறும். (பள்ளி விடுமுறை எனில், தாங்கள் வீட்டில் இருந்தே இணையவழியில் பங்கேற்கலாம்)
3. **யார் பங்கேற்கலாம்?:** வான்முகில் அமைப்பின் அரசமைப்பு உரிமைக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளி ஆசிரியர்கள், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அரசுப்பள்ளி - அரசு உதவிபெறும் பள்ளி - தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் இந்த வினாடி-வினாவில் பங்கேற்கலாம்.
4. **முன்பதிவு:** பங்கேற்க விரும்புவோர் கட்டாயம் தங்கள் பெயர்களை இதற்கென வழங்கப்படும் **கூகுள் படிவத்தின் மூலம் பதிவு செய்ய வேண்டும்.** (https://forms.gle/jtPQcwRRm3DmJB6k9) இதற்கான முன்பதிவினை **நவம்பர் 22 காலை 11 மணி முதல் நவம்பர் 25 மாலை 5 மணி வரை செய்யலாம்.**
5. பெயர் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே வினாடி-வினாவில் பங்கேற்பதற்கான இணைப்பு முகவரி **நவம்பர் 26 அன்று காலை 10 மணியளவில்** பகிரப்படும். இதனை வேறு எவருக்கும் பகிரக் கூடாது. பதிவு செய்தவர்கள் மட்டுமே சூம் இணைய அரங்கில் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.
6. வினாடி-வினா நிகழ்வில் பங்கேற்பதற்கான சூம் இணைய நுழைவாயில் **நவம்பர் 26 அன்று காலை 10.50 முதல் 11.05 மணி வரை மட்டுமே திறந்திருக்கும்.** அதற்கு பின்னர் வருபவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சரியாக 11.05 மணிக்கு அறிமுகவுரை மற்றும் வினாடி-வினா பூர்த்தி செய்வதற்கான விதிமுறைகள் குறித்து அறிவிக்கப்படும்.
7. பின்னர் 11.15 மணிக்கு வினாடி-வினாவுக்கான கேள்விப் படிவம் (Google Form வடிவத்தில்) சூம் கூட்டத்தில் பகிரப்படும்.
8. **பூர்த்தி செய்வதற்கான நேரம்:** வினாடி-வினா படிவத்தை பூர்த்தி செய்ய 15 நிமிடங்கள் வழங்கப்படும். பூர்த்தி செய்த கேள்விகளை சரி பார்ப்பதற்கு கூடுதலாக 5 நிமிடங்கள் வழங்கப்படும். **20 நிமிடத்திற்குள் “Submit” செய்துவிட வேண்டும். மிகச் சரியாக 21வது நிமிடத்தில் “Submit” செய்வதற்கான வசதி நிறுத்தப்படும்.** இது தொழில்நுட்ப ரீதியாக தானியங்கி முறையில் நடக்கும் என்பதை புரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

9. **வினாடி-வினா கேள்விகள்:** 30 கேள்விகள் வழங்கப்படும். கேள்விகள் அனைத்தும் தமிழ் மொழியில் இருக்கும். சரியான – பொருத்தமான பதில்களை தெரிவு செய்யும் வகையில் வினாக்கள் அமைந்திருக்கும்.
10. பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும். **80% மதிப்பெண் பெறும் அனைவருக்கும் "முகப்புரைப் பெட்டகமும் – கேடயமும்" விருதாக வழங்கப்படும்.** முடிவுகள் டிசம்பர் 10ஆம் நாள் அறிவிக்கப்படும்.

மேற்காணும் நிகழ்வுகள் குறித்து கூடுதல் தகவல்கள், சந்தேகங்கள் இருப்பின் கீழ்க்காணும் தொடர்பு எண்ணை அழைக்கலாம்.

**அரசமைப்புச் சட்டத்தையும் முகப்புரை உயர்த்திப் பிடிக்கும் உன்னத மதிப்பீடுகளையும் உரக்க உச்சரிப்பதும் உள்வாங்குவதும் இன்றைய காலத்தின் தேவை; நமது கடமையும் கூட.**

**வாருங்கள் இந்நிகழ்வில் இணைந்து பங்கேற்போம்..**

**அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்போம்..**

**முகப்புரையை உரக்க வாசிப்போம்..**

**தோழமையுடன்**


**ம. பிரிட்டோ**
இயக்குநர், வான்முகில்
9442618117

**கா. கணேசன்**
மாநில ஒருங்கிணைப்பாளர்
அரசமைப்பு உரிமைக் கல்வி
9994368503

**க. பிரியா**
மாநில துணை ஒருங்கிணைப்பாளர்
அரசமைப்பு உரிமைக் கல்வி
9994368523